காலைக்கதிர் (18.10.2024)



கரூர், செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில், உயர் கோபுர மின்விளக்குகள் அமைப்பதற்கும், மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிப்பதற்கும் ரூ.24.55 லட்சம் நிதியுதவியை புகழூர் நகராட்சி பொறியாளர் மலர்கொடியிடம், காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார்.

# உயர் கோபுர மின்விளக்கு அமைக்க ரூ.24.55 லட்சம் நிதி உதவி வழங்கல்

**கரூர், அக். 18-**

புகழூர் டி.என்.பி.எல்., சார்பில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்க, 24.55 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம் புகழூரில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தில், உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்க நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தலைமை வகித்தார்.

புகழூர் நகராட்சிக்குட்பட்ட சேலம், கரூர் தேசிய நெடுஞ்சாலையில், வேலாயுதம்பாளையம் பைபாஸ் முதல் கந்தசாமிபாளையம் (கட்டிபாளையம் பிரிவு சாலை) வரை, 1,500 மீட்டர் நீளமுள்ள சாலைகளின் மையப் பகுதியில், 25 மீட்டருக்கு ஒரு உயர் கோபுர மின்விளக்கு வீதம், 60 உயர் கோபுர மின்விளக்குகள் அமைப்பதற்காக, சாலையின் இருபுறமும், 260 மகிழ மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிப்பதற்காக என மொத்தம், 24 லட்சத்து, 55 ஆயிரம் ரூபாய் காசோலையை, புகழூர் நகராட்சி பொறியாளர் மலர்கொடியிடம், டி.என்.பி.எல்., பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

முதன்மை பொது மேலாளர்கள் நாகராஜன், பானுபிரசாத், ரங்கராஜன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

**தினமணி (18.10.2024)**

# 60 உயர்மின் கோபுரங்கள் அமைக்க டிஎன்பிஎல் ஆலை நிதியுதவி



உயர்மின் கோபுரம் அமைக்க நிதியுதவியை நகராட்சி புகழூர் நகராட்சி பொறியாளர் மலர்கொடியிடம் வியாழக்கிழமை வழங்கிய ஆலை அதிகாரிகள்.

கரூர், அக்.17: புகழூர் நகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் 60 உயர் மின்கோபுரங்கள் அமைக்க டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.20 லட்சம் நிதியுதவி வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை உள்ளிட்ட பகுதிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அதன் ஒருபகுதியாக, புகழூர் நகராட்சிக்குட்பட்ட சேலம் - கரூர் தேசிய நெடுஞ்சாலையில்வேலாயுதம்பாளையம் பைபாஸ் முதல் கந்தசாமிபாளையம் (கட்டிபாளையம் பிரிவுச் சாலை) வரை சுமார் 1500 மீ. நீள சாலைகளின் மையப் பகுதியில் 25 மீட்டருக்கு 1 வீதம் 60 உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்க ரூ.20 லட்சம் மற்றும் சாலையின் இருபுறமும் 260 மகிழ மரக்கன்றுகளை நட்டுப் பராமரிக்க ரூ. 4.55 லட்சம் என மொத்தம் ரூ. 24.55 லட்சத்திற்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் காசோலையை ஆலையின் பொது மேலாளர் (மனித வளம்) கே. கலைச்செல்வன், அலகு 1-ன் முதன்மைப் பொது மேலாளர் (இயக்கம்) எஸ். நாகராஜன், அலகு -2-இன் முதன்மைப் பொதுமேலாளர் (இயக்கம்) டி.வி.எஸ்.எஸ்.ஏ. பானுபிரசாத், பொது மேலாளர் (நிதி) ஆர். ரங்கராஜன் மற்றும் முதன்மை மேலாளர் (மனித வளம்) கே.எஸ். சிவக்குமார் ஆகியோர் புகழூர் நகராட்சி பொறியாளர் மலர்கொடி மற்றும் நகராட்சி மேலாளர் நாகராஜன் ஆகியோரிடம் வழங்கினர்.

**தினமலர் (19.10.2024)**

# புகளூர் நகராட்சியில் உயர் கோபுர மின்விளக்கு

## நிதி வழங்கியது காகித ஆலை

வேலா யுதம்பாளையம், அக். 19–

புகளூர் நகராட்சி சார்பில் சேலம்–கரூர் தேசிய நெடுஞ்சாலையில் வேலாயுதம்பாளையம் பைபாஸ் முதல் கந்தம்பாளையம் அருகே கட்டிபாளையம் பிரிவு சாலை வரை ஆயிரத்து 500 மீட்டர் நீளமுள்ள சாலையின் மைய பகுதியில் 25 மீட்டருக்கு ஒரு உயர் கோபுர மின்விளக்கு வீதம் 60 உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்கப்பட உள்ளது.

அதேபோல் சாலையின் இருபுறமும் 260 மகிழ மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிப்பு செய்யவும் உள்ளது. அதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் புகளூர் நகராட்சிக்கு உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்க ரூ.20 லட்சமும், மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிக்க ரூ.4 லட்சத்து 55 ஆயிரமும் என்று மொத்தம் ரூ.24 லட்சத்து 55 ஆயிரம் நிதி உதவி வழங்கி உள்ளது.



புகளூர் நகராட்சியில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்க தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் பொது மேலாளர் கலைச்செல்வன், முதன்மை பொது மேலாளர்கள் நாகராஜன், பானுபிரசாத், பொது மேலாளர் ரங்கராஜன், முதன்மை மேலாளர் சிவக்குமார் ஆகியோர் ரூ.24 லட்சத்து 55 ஆயிரத்திற்கான காசோலையை புகளூர் நகராட்சி பொறியாளர் மலர்க்கொடி, மேலாளர் நாகராஜன் ஆகியோரிடம் வழங்கினர்.

அதற்காக காகித ஆலை மனிதவள அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் பொது மேலாளர் கலைச்செல்வன், முதன்மை பொது மேலாளர்கள் நாகராஜன், பானுபிரசாத், பொது மேலாளர் ரங்கராஜன் மற்றும் முதன்மை மேலாளர் சிவக்குமார் ஆகியோர் ரூ.24 லட்சத்து 55 ஆயிரத்திற்கான காசோலையை புகளூர் நகராட்சி பொறியாளர் மலர்க்கொடி, மேலாளர் நாகராஜன் ஆகியோரிடம் வழங்கினர்.

**தினகரன் (19.10.2024)**

### புகளூர் நகராட்சிக்கு

# உயர் கோபுர மின் விளக்கு அமைக்க ரூ.24 லட்சம் நிதி

## தமிழ்நாடு காகித ஆலை வழங்கியது

வேலாயுதம்பாளையம், அக்.19: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் புகளூர் நகராட்சிக்கு உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பதற்கும் மற்றும் மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிப்பதற்கு ரூ.24.55 லட்சம் நிதி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு காகித ஆலை நிர்வாகம் ஆலையை சுற்றியுள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளுக்கு பல்வேறு சமுதாய நல்லுணர்வுடன், பல்வேறு சிறப்பு உதவிகள் செய்து வருகிறது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளைச் செய்து வருகிறது.



புகளூர் நகராட்சிக்கு உயர் கோபுர மின் விளக்கு அமைக்க ரூ.24 லட்சம் நிதியை தமிழ்நாடு காகித ஆலை வழங்கியது.

அதன் ஒரு பகுதியாக, புகழூர் நகராட்சிக்குட்பட்ட சேலம் கரூர் தேசிய நெடுஞ்சாலை (NH44) வேலாயுதம்பாளையம் பைபாஸ் முதல் கந்தம்பாளையம் (கட்டிபாளையம் பிரிவு சாலை) வரை சுமார் 1500 மீட்டர் நீளமுள்ள சாலைகளின் மையப்பகுதியில் 25 மீட்டருக்கு ஒரு உயர் கோபுர மின்விளக்கு வீதம் 60 உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்க ரூ.20 லட்சமும் மற்றும் சாலையின் இரு புறமும் 260 மகிழ மரக்கன்றுகளை நடவுசெய்து பராமரிப்பதற்காக ரூ.4.55 லட்சமும் என மொத்தம் ரூ.24.55ற்கான காசோலையை தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) அலகு -1 நாகராஜன், முதன்மை பொது மேலாளர் (இயக்கம்) அலகு -2, பானுபிரசாத், பொது மேலாளர் (நிதி) ரங்கராஜன் மற்றும் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் ஆகியோர் புகழூர் நகராட்சி பொறியாளர் மலர்கொடி மற்றும் நகராட்சி மேலாளர் நாகராஜன் ஆகியோர்களிடம் வழங்கினர்.

**தினத்தந்தி (19.10.2024)**



### காகித ஆலை சார்பில்

# புகளூர் நகராட்சிக்கு ரூ.36¼ லட்சம் நிதி உதவி

நொய்யல், அக்.19-

புகளூரில் உள்ள காகித ஆலை சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்டமங்கலம், கோம்புப்பாளையம் என்.புகளூர், புன்னம் ஆகிய ஊராட்சிகளில் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் உதவிகளை செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக புகளூர் நகராட்சிக்குட்பட்ட சேலம் -கரூர் தேசிய நெடுஞ்சாலை, வேலாயுதம்பாளையம் பைபாஸ் முதல் கந்தம்பாளையம் (கட்டி பாளையம் பிரிவு) வரை சுமார் 1,500 மீட்டர் நீளமுள்ள சாலையின் மையப்பகுதியில் உயர் கோபுர மின்விளக்கு வீதம் 60 உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பதற்காக ரூ.20 லட்சமும், சாலையின் இருபுறமும்

260 மரக்கன்றுகளை நடவு செய்து பராமரிப்பதற்காக ரூ.4 லட்சத்து 55 ஆயிரம் என மொத்தம் ரூ.24 லட்சத்து 55 ஆயிரத்திற்கான காசோலையை காகித ஆலை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், முதன்மை பொது மேலாளர்கள் நாகராஜன், பானுபிரசாத், பொது மேலாளர் (நிதி) ரங்கராஜன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் ஆகியோர் புகளூர் நகராட்சி பொறியாளர் மலர்கொடி, மேலாளர் நாகராஜன் ஆகியோரிடம் வழங்கினர். இதேபோல் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15 உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக ரூ.11லட்சத்து 81 ஆயிரம் நிதிக்கான காசோலையை காகித ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித்தலைவர் ரூபா, துணைத்தலைவர் சதீஷ் ஆகியோரிடம் வழங்கினார்.